மென்றும் சொல்கிறார்கள். அது உண்மையா? டென்டருக்கு அனுமதி கொடுக்கிற முறையிலே அமைச்சர் அவர்கள் இன்றே ஆணையிடுவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகாவானந்தம்: துணைத் தலைவர் அவர்களே, என்னிடம் கொடுக்கப்பட்டிருக்கின்ற குறிப்பில் இதுவரை இத் திட்டத்திற்குத் தேவையான பொருள்கள் சேகரிக்கப்பட்டு, திட்டத்திலுள்ள 3 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுவதற்கு ஒப்பந்தக்காரர்கள் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஒப்பந்தக்காரர்கள் நியமனத்திலே ஏதோ சிக்கல் இருபபதாக இப்போது மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறார். அந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அரசு அறிவிக்கும்.

6. அறிவிப்புகள்

பேரவை அலுவல்கள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. நேற்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவிற்கு இணங்க, 28-8-1981 அன்று அரசினர் சட்ட முன்வடிவு என்ற இனத்தில் 1981ஆம் ஆண்டு மதுரை-காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 68/1981) முதலாவதாகச் சேர்க்கப்பட்டது. தவிர்க்க முடியாத காரணங்களால் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 28-8-1981 அன்று பேரவைக் கூட்டத்தில் கலந்து கொள்ள இயலாமல் இருப்பதால், அந்தச் சட்ட முன்வடிவு 29-8-1981 அன்று சட்ட முன்வடிவுகள் என்ற இனத்தில் கடைசியாகச் சேர்க்கப்பட இருக்கிறது என்பதைப் பேரவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

7. அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 32-ஐ தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ தளர்த்தி, இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஏகமனதாக நிறைவேற்றப்பெற்றது,

(ஆ) தமிழகத்தில் உணவு நிலைமையும், இன்றியமையாப் பொருட்களின் விலை நிலவரமும் பற்றிய வெள்ளை அறிக்கை—விவாதம் (தொடர்ச்சி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து மாண்புமிகு நிதியமைச்சர் 24-8-1981 ஆம் தேதியன்று அவைக்கு அளித்த வெள்ளை அறிக்கையின் மீது விவாதம் தொடரும்.